திரு. ஏ. ஆர். சுப்பையா : ஆண்களைவிட பெண்கள் உண்மையாக உழைப்பார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது அந்தந்த இடங்களைப் பொறுத்தும், அவரவர்களைப் பொறுத்தும் உள்ள அனுபவமாகத்தான் இருந்திருக்கும். (சிரிப்பு)

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆண்டு புதிதாக டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபிசர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏதாவது குறிப்புகள் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்மையில் மூன்று மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் ஓய்வு பெறுகிறார்கள். அதற்கான அளவு அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும். இராமனாதபுரம் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி இடமும் இப்பொழுது காலியாக இருக்கிறது. அதற்கும் ஒரு தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

Bomb explosion in Girls' High School at Madurai.

* 499 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether a number of girl students were injured on or about the 13th January 1971 in a Girls' High School at Madurai by bomb explosion; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் கேப்ரின் ஹாலில் இருக்கும் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஒரு நாள் வெடிப்பு ஏற்பட்டு ஒரு பெண்ணுக்குக் காயம் ஏற்பட்டதே, அதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலன் விசாரணை நடந்ததே அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு அல்லவா? தேதியில் வேண்டுமென்றால் சிறிது மாறுதலாக இருக்கலாம். இந்த ஆண்டு ஆரம்பத்தில்தான் நடந்தது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி அங்கேயிருக்கின்ற இன்ஸ்பெக்ட்ரஸ் ஆஃப் கர்ல்ஸ் ஸ்கூல்ஸ்லை கேட்டதில், 'அப்படிப்பட்ட சம்பவம் ஒன்றும் மதுரைப் பகுதியில் நடைபெறவில்லை' என்றுதான் தகவல் அனுப்பி வைத்திருக்கிறார்.

' It has been reported that no such occurrence took place in any of the Girls' High School in Madurai' என்றுதான் குறிப்பு வந்திருக்கிறது.

Valuation of S.S.L.C. examination papers.

* 500 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the total number of teaching staff employed for valuing S.S.L.C. papers during April 1971 ; and

(*b*) the centres to which they were assigned?